### ஏற்கனவே த.வெ.க. ஆட்சியில் சட்டம் – ஒழுங்கு சீர்கெட்டுள்ள நிலையில்

# காவலர்கள் நியமனத்தை ஓராண்டுக்குத் தள்ளிவைப்பதா?

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஜூலை 19 –**

**தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்தது முதலே குற்றச்சம்பவங்கள் பெருகி சட்டம் ஒழுங்கு பெருமளவில் சீர்கெட்டு கிடக்கும் நிலையில், காவலர்கள் நியமனத்தை ஓராண்டு தள்ளி வைத்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**



தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்தது முதலே குற்றச்சம்ப வங்கள் பெருகி வரும் நிலையில், முன்பை விட கூடுதலாக தற்போது காவலர்கள் தேவைப்படுகிறார்கள்.

ஆனால் நடப்பாண்டுக்கான காவலர்கள் நியமனத்தை இன்னும் ஓராண்டுக்கு இந்த அரசு தள்ளி வைத்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்தின் அறிவிப்பின்படி அடுத்த ஆண்டுதான் காவலர்கள் தேர்வுக்கான அறிவிப்பு வெளியாகவிருக்கிறது.

இது, காவல்துறை பணிக்காக காத்திருக்கும் லட்சக்கக்கான இளைஞர்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது.

இதன் மூலம், ஏற்கெனவே சீர்கெட்டுக் கிடக்கும் சட்டம் ஒழுங்கையும், காவல்துறை பணியின் மீது ஆர்வம் கொண்ட இளைஞர்களின் எதிர்காலத்தை யும் ஒருசேர கேள்விக்குறியாக்கி இருக்கிறது இந்த அரசு.

எனவே, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையம் தற்போது வெளியிட்டிருக்கும் அட்டவணையை உடனடியாக திரும்பப் பெற்று, நடப்பு ஆண்டிலேயே காவலர்களை நியமிப்பதற்கான பணிகளை தொடங்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# "தமிழ்நாடு" எனும் தனிப்பெரும் அடையாளத்தை ஓங்கி ஒலிப்போம்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.வாழ்த்து!

சென்னை, ஜூலை 19–

"தமிழ்நாடு" எனும் தனிப்பெரும் அடையாளத்தை ஓங்கி ஒலிப்போம் என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

எண்ணில்லா போராட்டங்களாலும், விலை மதிப்பில்லா உயிர்த் தியாகங்களாலும், நம் அன்னைத் தமிழ் நிலத்தின் பெயரை மீட்டளித்திட்ட நாள் இது.

நம் கழகம் பெற்ற அதிகாரத்தால், நம் தாய்நிலம் தலை நிமிர்ந்து, தெற்கிலிருந்து தொடங்கும் இத்துணைக் கண்டத்தின் வரலாற்றை முழங்கும் இனமானச் சொல்லாக நிலைப்பெற்றுவிட்டது, நம் தமிழ்நாடு!

பேரறிஞர் அண்ணா தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய இந்நாளில், மாநில உரிமைகளைக் காத்திட உறுதி கொள்வோம்.



"தமிழ்நாடு" எனும் நம் தனிப்பெரும் அடையாளத்தை ஓங்கி ஒலிப்போம்!

இவ்வாறு கனிமொழி கருணாநிதி தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்

### இலண்டனில் இருந்து இன்று (19-ஆம் தேதி) காலை சென்னை திரும்பும்

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு விமான நிலையத்தில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்திடுவீர்!

## காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*காஞ்சிபுரம், ஜூலை. 19-*

இருவார சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு லண்டனில் இருந்து இன்று (19ஆம் தேதி) காலை 7.00 மணியளவில் சென்னை திரும்பும் முன்னாள் முதல் அமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும் சென்னை விமான நிலையத்தில் அலைகடலென திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

முன்னாள் முதல் அமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 4ஆம் தேதி காலை இருவார



கால சுற்றுப்பயண மாக இலண்டன் புறப் பட்டுச் சென்றார். அவருடைய மனைவி துர்கா ஸ்டாலின் அவர்களும் அவருடன் சென்றார்.

இருவார கால இலண்டன் பயணத்தை முடித்துக்கொண்டு கழகத் தலைவர் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குடும்பத்துடன் இன்று (19ஆம் தேதி) காலை 7.00 மணியளவில் தாயகம் திரும்புகிறார்.

சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள சர்வ தேச விமான நிலையத்தை இன்று காலை வந்தடையும் கழகத் தலைவர் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேள தாளம், பாண்டு வாத்தியம் முழங்க, கழகத்தினர் வாழ்த்தொலியுடன் மிகவும் எழுச்சியான முறையில் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள சர்வதேச விமான நிலைய முனையத்தை விட்டு வெளியே வரும் நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் அவர்களுக்கு காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அளிக்கப்பட உள்ள பிரம்மாண்டமான வரவேற்பில்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் தமது கரங்களில் கழகக் கொடியையும், வரவேற்பு பதாகைகளையும் ஏந்தி ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து விண்ணைப் பிளக்கும் வகையில் வாழ்த்து முழக்கங்களை எழுப்பி மிகப் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கிறேன்.

இந்த மாபெரும் வரவேற்பில் நாம் பங்கேற்பது "நமது கடமை","நமது உரிமை" என்ற அந்த இலட்சிய உணர்வோடு கழகத்தினர் அனைவரும் நாளை காலை 7.00 மணிக்கெல்லாம் அணி திரண்டு வந்து மகிழ்ச்சியுடன் வரவேற்பு அளிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### அகரம் பேரூராட்சி முழுவதும்

# காவிரி கூட்டுக்குடிநீர் தங்குதடையின்றி கிடைக்க உறுதுணையாக இருப்பேன்!

## நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

*திண்டுக்கல், ஜூலை 19-*

அகரம் பேரூராட்சி முழுவதும் காவிரி கூட்டுக் குடிநீர் தங்குதடையின்றி கிடைக்க உறுதுணையாக இருப்பேன் என்று அகரம் பேரூராட்சிக்குட்பட்ட பெரியமல்லணம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளரும், முன்னாள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ. பெரியசாமி அவர்கள் 2026 சட்டமன்ற தொகுதியில் தனக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கிராமம் கிராமமாகச் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து வருகிறார். அகரம் பேரூராட்சிக்கு உட்பட்ட



கோட்டூர் ஆவாரம்பட்டியில் தனது நன்றி தெரிவிக்கும் பிரச்சாரத்தை தொடங்கிய ஐ.பெரியசாமி அவர்கள் பாப்பணம்பட்டி, பெரிய மல்லணம்பட்டி, கருங்கல் பட்டி, ரெங்கப்பனூர், உலகம்பட்;டி, சுக்காம்பட்டி, லெட்சுமணம்பட்டி, காக்காதோப்பு ஆகிய கிராமங்களுக்கு சென்று பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்ததற்கு நன்றி தெரிவித்தார்.

பெரிய மல்லணம்பட்டிக்கு வந்த முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் ஆரத்தி எடுத்து அதிர்வேட்டு முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் பொது மக்கள் மத்தியில் பேசிய ஐ.பெரியசாமி அவர்கள் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை 37 ஆண்டுகளாக தொகுதி மக்களோடு மக்களாக இணைந்து களப்பணி ஆற்றிவருகிறேன். 15 வருடங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் தொகுதி மக்களுக் கான நலத்திட்டப் பணிகளை நான் என்றும் குறை வைத்தது கிடையாது. அதைப்போலத்தான் ஆத்தூர் தொகுதி மக்களும் என் மீது அளவில்லாத அன்பு கொண்டு என்னை தொடர்ந்து வெற்றிபெற வைத்துள்ளார்கள்.

அகரம் மற்றும் தாடிக்கொம்பு பேரூராட்சிக்கு எரியோடு பகுதியிலிருந்து காவிரி கூட்டுக்குடிநீர் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதுடன் அகரம் பேரூராட்சிக்குட்பட்ட கிராமங்களுக்கு சாலை வசதி தடையின்றி குடி தண்ணீர் வசதி கிடைக்க நடவடிக்கை எடுப்பேன் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த பெண்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். நன்றி தெரிவிக்கும் பிரச்சார கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், தாடிக்கொம்பு பேரூராட்சி மன்றத் தலைவர் கவிதா சின்னத்தம்பி, அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர்கள் நாகப்பன் ஜெயபால், மாவட்ட தகவல் தொழில்நுட்ப துணை ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன், திண்டு;க்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம், இலஞ்சி ரயில்வே மேம்பாலப் பணிகளை

# தென்காசி மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி. ஆய்வு!

## தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்பு!

*தென்காசி, ஜூலை 19-*

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரத்தில் நடைபெற்று வரும் ரயில்வே மேம்பாலம் பணி மற்றும் இலஞ்சியில் நடைபெற்று வரும் ரயில்வே மேம்பால பணி,ஆகிய 2 மேம்பால பணிகளை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் திடீர் ஆய்வு பணி மேற்கொண்டார்.இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்றார்.

தென்காசி மாவட்டம் தென்காசியிலிருந்து திருநெல்வேலி செல்லும் நான்கு வழிச்சாலையில் பாவூர்சத்திரம் பகுதியில் நடைபெற்று வரும் ரயில்வே மேம்பாலப் பணி மற்றும் தென்காசி முதல் இலஞ்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்று வரும் ரயில்வே மேம்பாலப்பணியையும் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார் ஆய்வு பணி மேற்கொண்டார். தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறையின் உதவி கோட்டப் பொறியாளர்கள் சத்தியபதி, கஸ்தூரி ராணி மற்றும் ரயில்வே சீனியர் பிரிவு பொறியாளர் பிரேம்குமார் ஆகியோர்களுடன் ஆலோசனை நடத்தி இப்பாலப்பணிகளால் பொதுமக்கள் தொடர்ந்து சிரமங்களை சந்தித்து வருவதாகவும், ஆகவே மேம்பாலப் பணியை துரித்தப்படுத்த அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

மேலும் இப்பாலப்பணிகளில் ஏதும் தாமதம் ஏற்பட்டால் உடனடியாக எனக்கு தகவல் கொடுக்கவும்,அதனை தான் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பேசி உடனடியாக சரி செய்து தருவதாகவும்,எக்காரணம் கொண்டும் மேம்பாலம் அமைக்கும் பணியை தாமதமாகாமல் விரைந்து முடித்து வரும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் 2 மேம்பாலங்களும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். என கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வு பணிகளில் ஒன்றிய செயலாளர் சீனித்துரை, ரமேஷ், அழகு சுந்தரம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் காவேரி சீனித்துரை, தென்காசி நகர செயலாளர் சாதிர், பேரூர் செயலாளர் முத்தையா, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் ரகீம், சாபீக்அலி, சுப்பிரமணியன், செல்வவிநாயகம், சுந்தரராஜன், ஆனந்தராஜ், முத்துசுப்பிரணியன், ராமராஜ், தேவி சிவக்குமார், கணேசன், பவுல் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கடந்த 29.06.2026 முதல் 07.07.2026 வரை பெங்களூரில் நடைபெற்ற அகில இந்திய அளவில் ( YONEX SUNRISE ALL INDIA SUB JUNIOR Ranking Badminton Tournament 2026 ) போட்டியில் 15 வயதுக்குட்பட்ட இரட்டையர்கள் பிரிவில் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் இனியன் முன்றாம் இடம் பெற்றுள்ள மாணவருக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணியிடம் வாழ்த்துக்களை தெரிவித்துப் பெற்றார்.

### மதுரை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி – திண்டுக்கல் அரசு போக்குவரத்துக் கழகத்தில்

# பணி மூப்பு அடிப்படையில் - சுழற்சி முறை பணி வழங்க வேண்டும்!

## அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. கோரிக்கை!

*திண்டுக்கல். ஜூலை.19-*

திண்டுக்கல் அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, பொதுச்செயலாளர் பொன்.செந்தில் தலைமை வகித்தார். பிரச்சார செயலாளர் முத்துராமன், மத்திய சங்க செயலாளர்கள் ஜெகன் பாலு, முருகப்பெருமாள் முன்னிலை வகித்தனர்.

இதில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல் மண்டலத்தில், திண்டுக்கல், தேனி மாவட்டம் 2 மாவட்டங்கள் உள்ளது. சுமார் 700க்கும் மேற்பட்ட பஸ்கள் இயங்குகிறது.

திண்டுக்கல்லில் இருந்து குமுளி, பழனி, மதுரை, கரூர், சேலம், ஈரோடு, திருச்சி உட்பட பல மாவட்டங்களுக்கு பஸ்கள் இயக்கப்படுகிறது.

இந்நிலையில், திண்டுக்கல் மண்டலத்தில் போதுமான அளவில் டிரைவர்கள், கண்டக்டர் இல்லாததால், நீண்ட நாட்களாக ஒரே ரூட்டில் தொடர்ந்து டிரைவரும் நடத்துனரும் பலர் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலையில் அதிகாரிகள் சுழற்சி முறையில் பணி என்ற பெயரில் ஓட்டுநர் நடத்துனரை சில நாட்களாக பணி மாற்றம் செய்து வருகின்றனர்.

இது ஓட்டுநர் நடத்துனர் இடையே மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. ஓய்வு பெறுவதற்கு சில மாதங்கள் உள்ள நிலையில் பல தொழிலாளர்கள் உள்ளனர். நகரப் பஸ்களில் பணி புரிந்து வரும் டிரைவர், கண்டக்டர்களை நீண்ட தூரம் செல்லும் மொபசல் பஸ்களில் பணி புரிய நிர்பந்தப்படுத்துகின்றனர்.

வயது மூப்பின் காரணமாக பல்வேறு நோய்களை கொண்டுள்ள சிலர், எங்களால் எப்படி இரவு பகலாக செல்லும் நீண்ட தூர பஸ்களை பாதுகாப்பாக இயக்க முடியும். சுழற்சி முறை பேஜ் என்று சொல்லி டிரைவர் கண்டக்டர்களுக்கு ஆறு மாதத்துக்கு ஒரு பஸ் வீதம் பணிபுரிய வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள்.

அதிகாரிகள் செய்யும் இந்த நடவடிக்கையால், டிரைவர் கண்டக்டர்கள் நிர்வாகத்தின் மீது அதிருப்தியில் உள்ளனர். எனவே போக்குவரத்து நிர்வாகம் கடந்த காலங்களில் செயல்பட்ட முறையிலேயே செயல்பட வேண்டும். சுழற்சி முறை பேஜ் முறையை கைவிட வேண்டும். பழைய முறையிலேயே தொடர வேண்டும். அப்போது தான் போக்குவரத்து தொழிலாளர்கள் கவனமாக மன உளைச்சல் இல்லாமல் பணியாற்ற முடியும். என தெரிவித்தனர். மேலும் இந்த மன உளைச்சலில் கடந்த 10 தினங்களுக்குள் இரண்டு போக்குவரத்து ஊழியர்கள் மரணம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்றக் சங்க பொதுச் செயலாளர் பொன்.செந்தில் தெரிவித்ததாவது:

உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் வழங்கப்பட்ட உத்தரவுப்படி பணி மூப்பு அடிப்படையில் சுழற்சி முறை பணி வழங்காமல், மதுரை கோட்ட மேலாண் இயக்குனர் மற்றும் திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் தன்னிச்சையாக முடிவெடுத்து, கிலோ மீட்டர் அடிப்படையில் சுழற்சி பணி உருவாக்கி, அதில் தான் பணி புரிய வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றனர். இதில் மலை வழித் தடங்களில் இதுவரை பணிபுரியாத மூத்த ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களை நியமித்து கட்டாயப்படுத்துகின்றனர். இதனால் பெரும் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. நகரப் பஸ்களில் பணிபுரிந்த டிரைவர்களை நெடுந்தூர பஸ்களில் பணிபுரிய நிர்பந்தப் படுத்துகின்றனர். இதனால் டிரைவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இது குறித்து தொழிற்சங்கங்கள் நீதிமன்ற ஆணைப்படி பணி வழங்க வேண்டும் என்று கூறியும், அதனை பொருட்படுத்தாமல் மதுரை கோட்ட மேலாண் இயக்குனர் மற்றும் திண்டுக்கல் மண்டல பொது மேலாளர், தங்கள் நினைத்ததை சாதித்தே ஆக வேண்டும் என்று, கிலோமீட்டர் அடிப்படையில் தான் பணி புரிய வேண்டும் என்று கூறி வருகின்றனர். இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகி பல தொழிலாளர்கள் மருத்துவ விடுப்பில் செல்கின்றனர். ஆகையால் அரசு உடனடியாக தலையிட்டு பணி மூப்பு அடிப்படையில் சுழற்சி முறை பணி வழங்க வேண்டும், எனத் தெரிவித்தார்.



அகரம் பேரூராட்சி முழுவதும் காவிரி கூட்டுக்குடிநீர் தங்குதடையின்றி கிடைக்க உறுதுணையாக இருப்பேன் என்று அகரம் பேரூராட்சிக்குட்பட்ட பெரியமல்லணம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு, சட்டமன்ற தேர்தலில் அதிக அளவில் வாக்களித்த மல்லணம்பட்டி கிராம மக்களை என்றும் மறக்க மாட்டேன் என்றார். அருகில் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற தலைவா தலைவர் நந்தகோபால், துணைத்தலைவர் ஜெயபால் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.